## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

### SC.No. 86 /2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா. | : 9 | நாள் | : 12.12.2024 |
| பெயர் | : கவிதா | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of December 2024.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். இறந்துபோன இரஞ்சித் எதிரியின் மைத்துனர் எனக்கு அண்ணன் முறை வேண்டும். அவர் எதிரியின் அத்தை மகன். எதிரி என் கணவர் ஆவார். 2017 ம் ஆண்டு போலீசார் என்னை விசாரித்தார்கள். 2015 ம் ஆண்டு எனக்கு எதிரிக்கும் திருமணமானது. எதிரி ஹிட்டாச்சி என்ற வாகனத்தை இயக்கும் நபராக வெளியூரில் வேலை பார்த்து வந்தார். என் பெற்றோர் ஏமன்பட்டியில் வசித்து வந்தார்கள். திருமணத்திற்கு பின்னர் சில மாதம் கேரளாவில் இருந்துவிட்டு வாசுதேவநல்லூரில் உள்ள எதிரியின் வீட்டிற்கு வந்தோம். நான் எதிரியின் வீட்டில் இருந்து எதிரி வேலைக்கு

சென்று வந்தார். எதிரி வேலை செல்லும் நேரத்தில் ரஞ்சித் என்பவர் உறவினர் என்ற முறையில் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார். எதிரியின் தந்தையும், பெரியம்மாவும் அவ்வாறு பழகுவதை கொண்டு என் மீது சந்தேகம் பட்டார்கள். சென்னையில் ரஞ்சித் குமார் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார், அவர் ஒருமுறை வீட்டிற்கு வந்திருந்தபோது என்னிடம் பேசிக் கொண்டிருந்ததை, எதிரியின் தந்தை சந்தேகப்பட்டார். எதிரிக்கும், எனக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு, நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்னர் எனக்கு ரஞ்சித்தை எதிரி வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன். அவர்களுக்கு கிடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது, ரஞ்சித் தற்போது உயிருடன் இல்லை. எதிரி வெட்டியதால் 2 தினங்கள் ரஞ்சித் மருத்துவமனையில் வைத்திருந்ததாகவும், 2 நாட்கள் கழித்து இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கும், எதிரிக்கும் திருமணமாகி நாங்கள் இருவரும் கேரளாவில் வசித்து வந்து அதன் பின்னர் வாசுதேவநல்லூருக்கு திரும்ப வந்தோம் என்று போலீஸார் விசாரணையில் கூறியிருக்கிறேன். எதிரியின் அப்பாவும், பெரியம்மாவும் என் மீது சந்தேகப்பட்டார்கள் என்ற விபரத்தினை போலீஸார் விசாரணையில் கூறினேன். எங்கள் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்பது பற்றி போலீஸார் விசாரணையில் கூறினேன். மேற்படி சண்டை ஏற்ப்பட்டதற்கு காவல்நிலையத்தில்

புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. ஆனால் ஊர் நாட்டாண்மை வந்து என்னையும், எதிரியையும் கண்டித்தார். அந்த விபரத்தினை காவல்துறை விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி சந்தேகப்பட்டதால்தான் பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். எதிரி என் மீது சந்தேகப்பட்டதாக கூறுவது பொய் என்றும், நான்தான் எந்த காரணமின்றி பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை போலீஸார் என்னை விசாரிக்கும்போது ஏமன்பட்டியில் குடியிருந்தேன். வாசுதேவநல்லூர் காலனியில் இல்லை. நான் கூறுவது பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2024.12.12 17:12:29 +0530